உ

திருச்சிற்றம்பலம்

ஈங்கோய்மலை அந்தாதி

ஆக்கியோர் :

திருவாசகமணி

விஜய
ஆடி 32.

1953

விலை அணா
எட்டு

ஓம்

சிறப்புப்பாயிரம்

—o—

திருலோக சீதாராம்

ஆசிரியர், "சிவாஜி", திருச்சிராப்பள்ளி.

கலிவெண்பா

உள்ளத் தெளிவில் ஒன்றே பொருளென்று
வெள்ளத் தமிழ்கூறு வேட்கையினன்—கள்ளமிலா
நெஞ்சக் கவிஞர் திருவா சகமணிதான்
கொஞ்சு தமிழ்ப்பெருமை கூறிடவோ—செஞ்சடையான்
சோதி வடிவாய்ச் சுடரொளியாய் வான்முகடு
மோதித் திறந்து முடிதுளக்கிப்—பாதங்கள்
தாழ மிதித்துத் தராதலமுங் கீழுலகும்
ஆழப் புதைத்திட்ட அற்புதனைப்—பாழ்வெளியைப்
பயிர்செய்து கூத்தாடும் பார்ப்பதியை ஈங்கோயில்
உயிரார் உணர்வுடனே ஒன்றிச்—செயிர்தீர்ந்த
தீந்தமிழில் தேனூற்றும் திருவா சகமலரின்
பூந்தா துகுமுள்ளம் பூசித்த—தேன்தாங்கு
நாறுகும் பாட்டால் நுணுகிச் சிவமென்னும்
தேறல் திளைத்த திருவாளன்—மாருத
சித்தம் பதித்துச் சிவமே பொருளென்று
நித்தம் உவக்கின்ற நீர்மைக்குப்—பித்துற்ற
கண்ணீர் பெருக்கிக் கசிவந்த பூந்தமிழால்
பண்ணீர்மை பொங்குவெண் பா!

உ

திருச்சிற்றம்பலம்

சங்கோய்மலை அந்தாதி

ஆக்கியோர் :

திருவாசகமணி

கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்.

★

இந்நூல்,

முசிறி, உயர்திரு. எம். பி. கிருஷ்ணசாமி பிள்ளை பி. ஏ., பி. எல்.

அவர்களின் பொருளுதவியைக்கொண்டு,

ஆக்கியோரால் வெளியிடப்பெற்றது

★

விஜய, ஆடி, சுவாதித்திருநாள்

ஆகஸ்டு

1953

பதிப்புரிமை]

[விலை அணா எட்டு

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளின்

திருநட்சத்திர வெளியீடு

விஜய வருடம், ஆடிச் சுவாதிநாள்

உ

தோற்றுவாய்

ஸ்ரீமரகதாசலம் என்றும், ஈங்கோய்மலை* என்றும் வழங்கி வரும் மிகப் பெருமை வாய்ந்த நற்றலத்தைப்பற்றிக் கேள்விப்பட்டது முதல் அதனைக் காண்டகு காதல் அடியேனுள்ளத்தில் தோன்றி வளருவதாயிற்று. ஏறக்குறைய நான்கு ஆண்டுகளாகவே ஈங்கோய்மலை எனும் பாங்கார் தலத்தை யான்காணும் நலத்தை எதிர்பார்த்த வண்ணம் இருந்து வந்தேன். நாளைப் போவேன் ஈங்கோய்க்கு, நாளைப் போவேன் என்றே நான்பல நாளைக்கழித்தும் எய்த்தேன். அவனருளாலே அவன்றாள் வணங்குதலன்றி எவனுடைய முயற்சியும் இம்மியும் பயன்தராது என்பது அனுபவம் நிறைந்த மூதோர் மொழியன்றோ? ஆகலின், இவ்வாண்டு ஜூன் மாதம் ஆறும் நாளாகிய சோமவாரத்தன்றுதான் (விஜய ஆண்டு, ஆனி மாதம், 22ம் நாள்) மரகதாசலேசுவரரின் பாகங்கொண்ட மகிமைப் பிராட்டியாகிய அருள்வடிவத் தன்னையின் திருவருள் அடியேனுக்குக் கிட்டியது; அடியேன் ஈங்கோய்மலை மீது ஏறி எம்பெருமானைத் தரிசிக்கும் பேறு பெற்றேன்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசக சுவாமிகள், நக்கீரதேவர் முதலிய சைவாசாரியப் பெரியோர்களால் பாடப்பெற்றதுடன், தேவர்களும், முனிவர்களும், இந்திரனும், பிரமனும் ஆதிய உயர்ந்த பிறப்பினரும் தவம் செய்யத் தகுந்த தண்ணளியும் சாந்தியும் செறிந்த மேன்மையுடைய தலம் இம்மலையேயாம். இரத்தினகிரி சிவனாகவும், கடம்பர் கோவில் சேயாகவும் கருதப்படும் சோமாஸ்கந்தமூர்த்தத்தில், உமாதேவியாகக் கொண்டாடப்படுவதும் இவ்வீங்கோய்மலையே. காலையில் தொழக் கடம்பர் கோவிலும், உச்சியிற்பணிய இரத்தினகிரியும் இருப்பதுபோல், அந்தியில் தொழத் தகுவது ஈங்கோய் என்று திகழ்வதும் இம்மலையே. வேதாந்த விற்பனரும், விழுத்தவத்து ஞானியரும் விரும்பி வதிந்து, நாதாந்தம் கடந்த நாயகனைச் சோதியுருவில் கண்டு தொழும் ஆற்றல் உதவும் "**சிவானந்த சாதன நிலயம்**" என்னும் ஆசிரமம் ஒன்று, அருங்கலைப் பெருந்தவத் தடிகளார் தலைமையில் தன் அடிவாரத்தில் அமையப் பெற்றுள்ளதும் இம்மலையே.

இத்தகைய பெருமை வாய்ந்த சக்தி மலையாகிய இந்த ஈங்கோய் மலைப் பெருமானின் திருமுன் நின்று பணிந்த அடியேன் இந்நூலின் முதல் பத்துப் பாடல்களை பாடலானேன். அவற்றைத் தொடர்ந்து ஏனைய பாடல்களையும் அன்றே எழுதிமுடிக்க, நாயேனைத் தன்னடிகள் பாடுவிக்கும் நாயகன் அருள்புரிந்துதவினன். எனவே, எம்பெருமான்

---

* இது திருவெண்மலை என்று பொதுமக்களிடை இன்று வழங்கி வருகிறது. இது முசிறிக்கு மேற்கே 8½ மைல் தூரத்திலுள்ளது.

இந்நூலை யாக்குவித்த நாள் 6—7—53 ஆகும். இதனை ஈங்கோய்மலை யமர்ந்த அம்மையப்பருக்கே எனது அன்புக் காணிக்கையாக அடியேன் இன்று சமர்ப்பிக்கிறேன்.

புனிதமும் பொற்பும் நிறைந்த இம்மலை மீதுள்ள ஆலயம் இன்று மிகமிகப் பாழடைந்து நிற்கும் நிலை நம் சைவ மக்களின் பாழடைந்த உள்ளத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது. மதிற்சுவர்கள் இடிந்தும், உட்சுவர்களும் தரையும் காணச்சகிக்காதபடி ஊனப்பட்டும் கிடப்பதுடன், ஏனைய பலவகைகளிலும் இக்கோவில் பொலிவிழந்து காணப்படுவது நம் சமயபரிபாலனத்தர் மீது குற்றஞ்சாட்டி நிற்பது போல் உளது. இனியாவது நம் மக்கள் இக்கோவிலைப் புதுப்பித்து நம் சமயத்தின் மீது படிந்துள்ள கறையைப் போக்க முன்வர மாட்டார்களா என்று பலர் ஏங்கிநிற்கின்றனர். செல்வம் நிறைந்த ஆலயப்பணத்தை வேறுவகைகளிற் செலவழிக்க முற்படும் நம் அரசாங்கம் இக் கோவிலைப் புதுப்பித்தலையே தமது முதற்பணியாகக் கொண்டால் நாடு நலம் அடையும் என்று நான் வற்புறுத்தி அமைகிறேன்.

நான்காண்டுகளாக என் உள்ளத்துள் நான் தேக்கிவைத்திருந்த பேராவலைப் பூர்த்தி செய்து, நற்றுணையாகவும் நலந்தரும் சுற்றமாகவும் இருந்து, அடியேனை ஊக்குவித்த கெழுதகை நண்பராவார் இருவருக்கும் யான் எவ்விதத்தில் கைம்மாறு செய்ய இயலும்? இளமையும், அறிவும், இனியதாம் பண்பும், வளமிகு தோற்றமும், வண்மைசேர் ஆற்றலும் ஒருங்கே யமைந்தும், தகுந்த உத்தியோகத்தை அனைவரும் போற்றத் தகவுடன் நடாத்தியும் திகழ்கின்ற அன்பர் திரு. **உ. சுப்பிரமணியம்** பி. ஏ., டிபுடி தாசில்தார் அவர்கள் அவ்விருவருள் ஒருவர். அநேக நாட்களாக என்னை அடிக்கடி வற்புறுத்தி ஈங்கோய்மலைக்கு அழைத்துச் செல்ல முயன்றதுடன், பலவிதத்தும் உதவி செய்துவந்த அப் பெருந்தகையார் இறைவன் திருவருள் நிறையப் பெற்று எல்லாவித நலன்களுடனும் இனிது வாழ வேண்டுமென மனமார நினைந்து, வாயார வாழ்த்துவதன்றி யான் செய்யத்தக்க கைம்மாறு பிறிதொன்று இன்றாம்.

மற்றொரு நண்பர் எனது உரிமைத் துணைவராகிய திரு. **எம். பி. கிருஷ்ணசாமி பிள்ளை** பி. ஏ., பி. எல்., வழக்கறிஞர். முசிரி என்று வழங்கும் மூதூர்த் தோன்றிய இப்பெருந்தகையார் அவ்வூரின் பழம் பெருங்குடியின் பண்புசால் தோன்றல். குடிப்பெருமையும், குலத்தின் சிறப்பும்; படிப்பின் உயர்வும், பண்பின் மேன்மையும்; துடிப்பின் இளமையும், தூய்மைசேர் தொடர்பும்; செல்வப்பெருக்கமும் சீரெழில் தோற்றமும்; வளஞ்சேர் வாழ்க்கையும், இளஞ்சேய்ச் செல்வமும் ஆகிய சிறப்பனைத்தும் ஒருங்கே செறிந்த என் நண்பர் திரு. கிருஷ்ணசாமிபிள்ளை யவர்கள், கண்டார் காதலிக்கும் தன்மை வாய்ந்ததொரு கனவான். தற்கால நாகரிகச் சின்னங்களைத் தாங்கியும் முற்காலப்

பண்பாட்டிற்கு முரணின்றி வாழும் நற்கோலச் சீலராகிய இவர், வேதாந்த சாஸ்திரங்களைப் பயின்று, வித்தகச் சித்தர்களின் தொடர்பும் துணையும் பெற்று வாழும் மேதை என்பதை யான் அண்மையில் கண்டு மகிழ்ந்தேன். ஈதலாதி எண்ணில் அறங்கட்குதவும் பொருட் செல்வத்தையும், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் அருட் செல்வத்தையும் ஒருங்கே பெற்று ஓங்கி வளரும் பெரும் பேற்றை இத் தகைமையாளர் இப்பிறப்பில் பெற்றுள்ளமை இவர்களது பூர்வ புண்ணியத்தையும் அபூர்வ கண்ணியத்தையும் பொலிவுறக்காட்டு கின்ற சான்றாகும். இவர்களும் அடியேனைத் தம்முடன் அழைத்துச் சென்று ஈங்கோய்மலை நாதரின் இணையற்ற காட்சிப் பேற்றினைக் கண்டு, அடியேன் உருகிப் பெருகியுளங் குளிர முகந்துகொண்டு பருகிக் களித்துப் பரவசமுறும் பேற்றையடைய உதவியமை என்றும் மறக்கற் பாலதன்று. இந்நூலை உடனே அச்சிட்டு வெளியிடுவதற்கு இப் பெரியார் இனிதுவந்து பண உதவி செய்துள்ள சிவபுண்ணியக் கைங் கரியத்தின் பெருமை மிகப்பெரிதே. இவர்களும் இவர்களது வழித் தோன்றல்களும் ஈங்கோய்மலைப் பெருமானின் இன்னருட் பிரசாதம் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டு வாழி எனச் சொல்லாண்ட தமிழால் வாழ்த்துகிறேன்.

இந்நூல் முழுவதும் படித்தும், ஆய்ந்தும், திருத்தியும் பலவகை யிலும் உதவிசெய்து பண்புறு துணையாயிருந்த எனது கெழுதகை நண்பர்கள் இருவர். இவர்களுள் ஒருவர், திருச்சி, பொன்னையா உயர் நிலைப்பள்ளித் தமிழ் ஆசிரியர் வித்துவான் **உயர்திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்** அவர்கள். மற்றொருவர், தஞ்சை ஜில்லா, ஒரத்தநாடு, உயர் நிலைப்பள்ளித் தமிழ் ஆசிரியர், வித்துவான் **திரு. மீ. தங்கவேலன்** அவர்கள். இவ்விருவரது பேருதவியும் என்றும் மறக்க வொண்ணாத தாகும்.

திருச்சி, அர்ச். சூசையப்பர் கல்லூரியின் சமஸ்கிருதப் பேரா சிரியர் பிரம்ம **ஸ்ரீ. வே. கோபால அய்யங்கார்,** எம். ஏ. அவர்கள் சமஸ்க்ருதத்தில் எழுதி உதவிய வாழ்த்துச் சுலோகங்களும், திருச்சி, "சிவாஜி" ஆசிரியர் **திரு. திருலோக சீதாராம்** அவர்களது நவீனத் தமிழின் நற்சிறப்புப் பாயிரமும் இந்நூலை அணிசெய்து நிற்பது கண்கூடு. அவ்விருவருக்கும் என் நன்றியைச் செலுத்துகிறேன்.

வழக்கம்போலவே, இந்நூலை வளமுடனும் விரைவிலும், அருமை மிக்க தமது அச்சகத்தில் அச்சேற்றி உதவிய எனது பெருமை மிக்க நண்பர்களாகிய திருவாளர்கள் **டி. சிவப்பிரகாசம் பிள்ளை, டி. சிவஞானம்** ஆகிய இருவருக்கும் என் அன்புகலந்த நன்றி என்றும் உரியதாகுக.

திருச்சிராப்பள்ளி
16—8—53.
சுவாதித்திருநாள்.

திருவாசகமணி

திருஞானசம்பந்தப் பெருமான்

அருளிச்செய்த

*திருஈங்கோய்மலைத் திருப்பதிகம்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வானத்துயர்தண் மதிதோய்சடைமேல் மத்தமலர்சூடித்
தேனொத்தனமென் மொழிமான்விழியாள் தேவிபாகமாக்
கானத்திரவில் எரிகொண்டாடும் கடவுளுலகேத்த
ஏனத்திரள்வந் திழியும்சாரல் ஈங்கோய்மலையாரே. 1

சூலப்படையொன் றேந்தியிரவில் சுடுகாடிடமாகக்
கோலச்சடைகள் தாழக்குழல்யாழ் மொந்தைகொட்டவே
பாலொத்தனைய மொழியாள்காண ஆடும்பரமனார்
ஏலத்தொடுநல் இலவங்கமழும் ஈங்கோய்மலையாரே. 2

கண்கொள்நுதலார் கறைகொள்மிடற்றார் கரியின்உரிதோலார்
விண்கொள்மதிசேர் சடையார்விடையார் கொடியார்வெண்ணீறு
பெண்கொள்திருமார் பதனிற்பூசும் பெம்மான்எமையாள்வார்
எண்குமரியும் திரியும்சாரல் ஈங்கோய்மலையாரே. 3

மறையின்னிசையார் நெறிமென்கூந்தல் மலையான்மகளோடும்
குறைவெண்பிறையும் புனலுந்நிலவும் குளிர்புன்சடைதாழப்
பறையுங்குழலும் கழலும்ஆர்ப்பப் படுகாட்டெரியாடும்
இறைவர்சிறைவண் டறைபூஞ்சாரல் ஈங்கோய்மலையாரே. 4

நொந்தசுடலைப் பொடிநீறணிவார் நுதல்சேர்கண்ணினார்
கந்தமலர்கள் பலவுந்நிலவு கமழ்புன்சடைதாழப்
பந்தண்விரலாள் பாகமாகப் படுகாட்டெரியாடும்
எந்தம்மடிகள் கடிகொள்சாரல் ஈங்கோய்மலையாரே. 5

நீறாரகலம் உடையார்நிரையார் கொன்றையரவோடும்
ஆறார்சடையார் அயில்வெங்கணையால் அவுணர்புரமூன்றும்
சீறுவெரிசெய் தேவர்பெருமான் செங்கண்அடல்வெள்ளை
ஏறார்கொடியார் உமையாளோடும் ஈங்கோய்மலையாரே. 6

வினையாயினதீர்த் தருளேபுரியும் விகிர்தன்விரிகொன்றை
நனையார்முடிமேல் மதியஞ்சூடும் நம்பர்நலமல்கு
தனையார்கமல மலர்மேலுறைவான் தலையோடனலேந்தும்
எனையாளுடையான் உமையாளோடும் ஈங்கோய்மலையாரே. 7

* சுவாமி பெயர்—ஸ்ரீ மரகதாசலேசுவரர். தேவி பெயர்—ஸ்ரீ மரகதாம்பிகை.

பரக்கும்பெருமை இலங்கையென்னும் பதியிற்பொலிவாய
அரக்கர்க்கிறைவன் முடியும்தோளும் அணியார்விரல்தன்னால்
நெருக்கியடர்த்து நிமலாபோற்றி என்றுநின்றேத்த
இரக்கம்புரிந்தார் உமையாளோடும் ஈங்கோய்மலையாரே. 8

வரியார்புலியின் உரிதோலுடையான் மலையான்மகளோடும்
பிரியாதுடனாய் ஆடல்பேணும் பெம்மான்திருமேனி
அரியோடயனும் அறியாவண்ணம் அளவில்பெருமையோ(டு)
எரியாய்நிமிர்ந்த எங்கள்பெருமான் ஈங்கோய்மலையாரே. 9

பிண்டியேன்று பெயராநிற்கும் பிணங்குசமணரும்
மண்டைகலனாக் கொண்டுதிரியும் மதியில்தேரரும்
உண்டிவயிறர் உரைகள்கொள்ளா துமையோடுடனாகி
இண்டைச்சடையான் இமையோர்பெருமான் ஈங்கோய்மலையாரே. 10

விழவாரொலியும் முழவும்ஓவா வேணுபுரந்தன்னுள்
அழலார்வண்ணத் தடிகள்அருள்சேர் அணிகொள்சம்பந்தன்
எழிலார்சுனையும் பொழிலும்புடைசூழ் ஈங்கோய்மலையீசன்
கழல்சேர்பாடல் பத்தும்வல்லார் கவலைகளைவாரே. 11

திருநாவுக்கரசு நாயனார்

இடைமருது ஈங்கோய் இராமேச் சரம் இன்னம்பர் ஏரிடவை ஏமப்பேறூர்
சடைமுடி சாலைக் குடி தக்களூர் தலையாலங் காடு தலைச்சங்காடு
கொடுமுடி குற்றாலம் கொள்ளம்பூதூர் கோத்திட்டை கோட்டாறு
கடைமுடி கானூர் கடம்பந்துறை கயிலாய நாதனையே காணலாமே.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

"ஈங்கோய்மலையெம் எந்தாய் போற்றி"

....

"ஈங்கோய்மலையில் எழிலது காட்டியும்"

நக்கீரதேவநாயனாரின் திருவீங்கோய்மலை எழுபது

அடியும் முடியும் அரியும் அயனும்
படியும் விசும்பும் பாய்ந்தேறி—நொடியுங்கால்
இன்ன தெனஅறியா ஈங்கோயே ஓங்கார
மன்னதென நின்றான் மலை. 1

அரிகரியைக் கண்டஇடத் தச்சலிப்பாய் ஓடப்
பிரிவரிய தன்பிடியைப்பேணிக்—கரிபெரிதும்
கையெடுத்து நீட்டிக் கதம்சிறக்கும் ஈங்கோயே
மையடுத்த கண்டன் மலை. 2

....

உண்டிருந்த தேனை அறுபதங்கள் ஊடிப்போய்
மண்டிருந்த யாழ்முரலப் பைம்பொழில்வாய்க்—கண்டிருந்த
மாமயில்கள் ஆடி மருங்குவரும் ஈங்கோயே
பூமயிலி தாதை பொருப்பு. 3

ஊடிப் பிடிஉறங்க ஒண்கதலி வண்கனிகள்
நாடிக் களிறு நயந்தெடுத்துக்—கூடிக்
குணமருட்டிக் கொண்டாடும் ஈங்கோயே வானோர்
குணமருட்டும் கோளரவன் குன்று. 4

எய்யத் தொடுத்தோன் குறத்திநோக்கு ஏற்றதெனக்
கையிற் கணைகளைந்து கன்னிமான்—பையப்போ
என்கின்ற பாவனைசெய் ஈங்கோயே தூங்கெயில்கள்
சென்றன்று வென்றான் சிலம்பு. 5

....

ஏனம் கிளைத்த இனபவள மாமணிகள்
கானல் எரிபரப்பக் கண்டஞ்சி—யானை
இனம்எரிய முல்லைநகும் ஈங்கோயே நம்மேல்
வினைஎரியச் சென்றுகந்தான் வெற்பு. 6

கடக்களிறு கண்வளரக் கார்சிறவண் டார்ப்பச்
சுடர்க்குழையார் பாட்டெழுவுகேட்டு—மடக்கிளிகள்
கீதம் தெரிந்துரைக்கும் ஈங்கோயே ஆற்கீழ்நால்
வேதம் தெரிந்துரைப்பான் வெற்பு. 7

....

சந்தனப்பூம் பைந்தழையைச் செந்தேனில் தோய்த்தியானை
மந்த மடப்பிடியின் வாய்க்கொடுப்ப—வந்ததன்
கண்களிக்கத் தான்களிக்கும் ஈங்கோயே தேங்காதே
விண்களிக்க நஞ்சுண்டான் வெற்பு. 8

மந்தி மகவினங்கள் வண்பலவின் ஒண்சுளைக்கண்
முந்திப் பறித்த முறியதனுள்—சிந்திப்போய்த்
தேனாறு பாயும்சீர் ஈங்கோயே செஞ்சடைமேல்
வானாறு வைத்தான் மலை. 9

வழுகிதழ்க் காந்தண்மேல் வண்டிருப்ப ஒண்தீ
முழுகியதென் றஞ்சிமுது மந்தி—பழகி
எழுந்தெழுந்து கைநெரிக்கும் ஈங்கோயே திங்கட்
கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று. 10

திருச்சிற்றம்பலம்.

ஓம்
திருச்சிற்றம்பலம்

ஈங்கோய்மலை அந்தாதி

காப்பு

பூமேவு தேவும் புரந்தரனும் போந்தடைந்த
ஈமேவு மாமுனியும் ஏய்ந்துதொழும்—கோமேவும்
பன்னலமீங் கோய்மலையந் தாதிசொலப் பார்வதிதன்
கன்னலெனும் குஞ்சரத்தான் காப்பு.

——(o)——

நூல்

சீராரும் ஈங்கோய்த் திருக்குன்ற மீதமர்ந்து
பாராரும் விண்ணவரும் பாடியுற—நீராரும்
தண்ணூர் அருள்மழையைத் தான்பொழியும் நல்லெழிலி
அண்ணால்! நினையடைந்தே னால். 1

ஆலின் நிழலமர்ந்தன் றந்தணருக் காய்ந்தமறை
நாலின் திறமுழுதும் நன்குணர—மாலினொரு
பங்குடையாய்! நீயுரைத்த பாங்குரையீங் கோய்மலைமேல்
தங்குதயா மூலமெனும் தாய். 2

தாயாகிக் கேழலுக்கும் தண்ணூர் முலைதந்தாய்!
சேயாகிப் பார்ப்பனிமுன் சேர்ந்தாயால்—நாயாகி
நானலைந்தே ஈங்கோய்மா நன்மலைமேல் நாவரற்றித்
தானடைந்தேன் நின்தாள் சரண். 3

---

1. எழிலி—மேகம். ஆல்—அசை; அண்ணால்—அண்ணல் என்பதன் விளி.

2. தயா மூலம்—தயாமூல தன்மம். கருணையை மூலமாகக் கொண்ட தருமம். இது சமண சமயத் தத்துவத் தொடர்.

"சலங்கெடுத்துத் தயாமூலதன்மமென்னும் தத்துவத்தின் வழி நின்று"—அப்பர் தேவாரம்.

3. கேழலுக்கும்—பன்றிக் குட்டிகளுக்கும். முலைதந்தாய்—பாலூட்டினாய். பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்த படலம்—திருவிளையாடற் புராணம். "தாயாய் முலையைத் தருவானே" —திருவாசகம்

சரணம் சரணமெனத் தன்னடைந்தார்க் கென்றும்
மரணம் பிறப்பென்னும் மால்தீர்—பரனேமுன்
அத்தனெனும் பேருடனே ஆண்டருளிங் கோய்மலையாய் !
பித்தனெனும் பேருடையாய்! பேசு. 4

பேசும் பொருளுலகில் பின்னுகனே நீயன்றோ?
காசும் பொருளுமெனைக் காத்திடுமோ ?—தேசுமிகும்
ஒன்றுடையாய் வெள்ளேறே ஓங்கொளிசேர் சங்கோய்நற்
குன்றுடையாய்! தீர்ப்பாய் குறை. 5

சேயாகிப் பார்ப்பனி முன்சேர்ந்தாய்—விருத்த, குமார, பாலரான படலம்—திருவிளையாடற் புராணம். வைணவருக்கு வாழ்க்கைப்பட்ட சைவ வேதியப் பெண்ணின் முன் வயோதிகனுகவும், யுவனுகவும், குழவியாகவும் சிவபெருமான் காட்சி கொடுத்தருளினுர் என்பது கதைக்குறிப்பு. "பித்தவடிவு கொண்டிவ்வுலகிற் பிள்ளையுமாம், முத்தி முழுமுதல் உத்தரகோசமங்கை வள்ளல்"—திருவாசகம்.

4. மரணம் பிறப்பென்னும் மால்தீர்—பிறப்பு இறப்பு என்னும் இரண்டின்பால் ஏற்படும் மயக்கம் அல்லது அச்சத்தைத் தீர்க்கின்ற. "கரணங்களெல்லாம் கடந்து நின்ற கறைமிடற்றன், சரணங்களே சென்று சார்தலுமே தானெனக்கு, மரணம் பிறப்பென் றிவையிரண் டின் மயக்கறுத்த கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ" —திருவாசகம்.

"கறங்கோலை போல்வதோர் காயப் பிறப்போடிறப் பென்னும் அறம்பாவம் என்றிரண்டச்சம் தவிர்த்தென்னை யாண்டுகொண்டான்" —திருவாசகம்.

பித்தன் என்னும் பெயர் இறைவனுக்கு ஆரூரர் கொடுத்தது. அப் பெயரே ஏழாம் திருமுறையின் தொடக்கச் சொல்லாக இறைவனரு ளால் அமைக்கப்பெற்றுள்ளது. "பித்தாபிறைசூடி" — சுந்தரர் தேவாரம்.

5. முதல் அடி. உலகத்தோரால் பேசப்படும் ஒவ்வொன்றின் பொருளாகவும் நிலவுகின்றவன் நீ ஒருவன் அல்லவா. "எப்பொருட்கும் தானேயாய்" —திருவாசகம்.

"பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த, மாசில்மணியின் மணிவார்த்தை" —திருவாசகம்.

இரண்டாவது அடி. பணமும் வேறு பண்டங்களும் மட்டுமே என்னைப் பாதுகாக்கும் ஆற்றல் படைத்தவை ஆகுமா? ஆகா என்ற படி. "அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே"—பட்டினத்தார்.

"வைத்தநிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வியென்னும்...சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த வித்தகத் தேவர்"—திருவாசகம்.

தேசுமிகும் ஒன்றுடையாய் வெள்ளேறே—ஒளிமிகும் வெள்ளை விடை யொன்றினை யுடையவனே.

குறையேதும் என்னிடம்தான் கூடாதே காப்பாய்;
பிறையேறும் வேணிப் பிரானே!—மறைநாளும்
நீங்காமல் ஓதுமலை ஈங்கோய்மேல் நிற்பவனே!
ஏங்காமல் வைப்பாய் எனை. 6

எனையாரும் மேவி எமரென்பார் இல்லேன்
வினையாரை யல்லாது வேறே—சுனையாரும்
ஈங்கோய்நற் குன்றுடையாய்! ஏன்றுள்வாய் என்றனைநீ
தீங்கோயச் செய்தே தினம். 7

தினந்தவறு தேத்தியுனைச் சீருறுமத் தொண்டர்
மனந்தவறு தேயுறையும் மன்ன!—தனந்தவறு
ஈங்கோய்க்குன் றுயெனவே எண்ணியடைந் தேனடியேன்
பாங்கோயா தேவளரப் பார். 8

---

6. முதல் அடி. என்னிடம் குறைகள் ஒன்றும் வந்து கூடாத வண்ணம் காத்தருள்வாயாக.

இரண்டாவது அடி. பிறையைச் சூடிய சடையையுடைய பெருமானே.

மறை நாளும் நீங்காமல் ஓதுகின்ற—நாடோறும் மறைகள் ஓயாமல் அல்லது அகலாமல் உன்னைத்துதிக்கின்ற. "நான்கு மறைபயில் தில்லை அம்பலத்தே கண்டேனே." "வேதங்கள் தொழுதேத்தும் விளங்கு தில்லை கண்டேனே"—திருவாசகம்.

7. முதல் இரண்டு அடிகள். வினையாரை யல்லாது வேறு யாரும் எனைமேவி எமரென்பார் இல்லேன் (அநுவயம்.) வினையாரை யல்லாது —வினையுடையாரை அல்லது வினைகளை யல்லாது. எமர்—எம்மவர், எமது உறவினர். வினை மிக்கவர்களின் உறவின்றி வேறு நல்லோர் உறவில்லேன் என்றபடி.

சுனையாரும்—நீர்ச்சுனைகள் பொருந்திய.

ஏன்று ஆள்வாய்—ஏற்று, ஆட்கொள்வாய்.

தீங்கு ஓயச் செய்தே—தீவினையின் வலிமைஅறித்தே.

"தீங்கு வரவதனைக் காப்பான் மலை"—நக்கீரதேவர் திருவீங்கோய்மலை எழுபது.

8. தினந் தவறுதேத்தி—நாடோறும் ஏத்தி.

சீருறும் அத்தொண்டர்—சிறப்புடைய அத்தொண்டர்.

மனந்தவறுதே—மனத்தில் தவறுமல்.

தனந்தவறு—செல்வம் தவறுத, அல்லது குறையாத.

இறுதியடி. (எனது) பாங்கு ஓயாதவண்ணம் யான் உயர என்னைப் பார்த்தருள் செய்க.

பார்ப்பதற்குன் பாலீர்க்கும் பாங்கார்ஈங் கோய்மலையே;
ஆர்ப்பதற்குன் சீரார் அரவொலியே;—சேர்ப்பதற்கென்
கையிரண்டே; பற்றுதற்குன் காலிரண்டே என்றடைந்தேன்
ஐயிரண்டே தானறியா யான். 9

யானே தவம்செய்தேன்! யானே பலன்கண்டேன்!
யானே பவமறுக்க லானேன்காண்!—ஏனேயோ?
என்றுரைசெய் வாய்! இதற்குக் காரணந்தான் ஈங்கோயாம்
குன்றுறையான் சார்ந்ததெனக் கொள். 10

கொள்ளாய்நின் தொண்டருளே கூவிக் குறையறுத்து
நள்ளாய் எனஅடைந்த நாயேனை—எள்ளாமல்
நற்றவத்தோர் போற்றுமலை ஈங்கோய்சேர் நாதவருள்
பற்றவைத்தாய் என்றனைநின் பால். 11

---

9. உன் பால்ஈர்க்கும்—உன் வயம் இழுக்கின்ற.

ஆர்ப்பதற்குன்...அரவொலியே—கூவுதற்கு உன் புகழ் நிறைந்த 'ஹரஹர' என்னும் ஒலியையுடைய நாமமே தகுந்தது.

ஒன்றுபட்டுக் குவியத் தகுந்தவை என் இருகரங்களே ஆகும்.

பற்றிக்கொள்வதற்கு ஏற்றவை உனது இரு பாதங்களே ஆகும்.

ஐயிரண்டே—பத்து. "பத்துக் கொலாமடியார் செய்கை தானே"—அப்பர் தேவாரம். இவ்வுரையும் பொருந்தும்: அகர, உகரம். "எட்டினோடிரண்டும் அறியேனையே"—திருவாசகம்.

10. "யானே தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம் யானே பிறப்பறுப்பான் எண்ணினேன்"—காரைக்காலம்மையார்.

"யானே தவம் செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான்—யானே
இருந்தமிழ் நன் மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது" —பூதத்தாழ்வார்.

ஏனேயோ...............கொள்—இவ்வாறு நீ பெருமையுடன் கூறிக்கொள்வதேன் என்று கேட்கிறாயா? அதற்குக் காரணம், நான் ஈங்கோய் மலையுடைய மரகதீசுவரரைச் சார்ந்ததுதான் என்று கொள்வாயாக.

11. நள்ளாய்—நட்பாக்கிக்கொள்வாய்.

எள்ளாமல்—இகழாமல்.

நாதவருள்.........உன்பால்—நாதனே, உன் அருள் எனக்குப் பற்றுக்கோடாக நிற்கும்படி என்னை நிலைக்கவைத்தாய்.

பாலும் தெளிதேனும் திங்கரும்பின் பாகுடனெய்
நாலும் பொழிந்தாட்டி நாடொறுமுன்—பாலார்ந்து
நான்களித்துப் போற்றுதற்கீங் கோய்மலைமேல் நன்கடைந்தேன்
வான்களித்துப் போற்றுகின்ற வா. 12

வாராயென் சந்நிதிக்கென் வார்கழலே வாழ்த்திமுனம்
சேராய் எனக்கனிந்து சேயேனை—நேராய்முன்
நிற்பித்தாய் தென்னீங்கோய் நீள்மலைமேல்! நின்னெறிதான்
கற்பித்தாய் காதலுடன் காண். 13

காணும் கரணமெலாம் பேரின்பக் காட்சியவாய்த்
தோணும் படிக்குனது தூய்மலர்த்தாள்—பூணுமொரு
பேறுநலம் வாய்ந்திடலீங் கோய்மலையாய் பேயனேயேன்
வேறுநலம் கொள்வதெது வே? 14

வேயாருந் தோளியுமை வேட்கையுடன் கூடிநின்ற
தாயாரின் மேன்மைத் தயாபரனே!—பேயாரும்
வெஞ்சுடலை யாடிமலை ஈங்கோய்சேர் வித்தக!என்
நஞ்சுடலைக் காயாய் நனி. 15

---

12. வான்களித்து...வா—வானுலகத்தோர் மகிழ்ந்து போற்று கின்ற விதத்தில்.

13. நின்னெறி......காண்—உனது திருநெறியை யான் அறியும் வண்ணம் செய்தனை. "சிறு நெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்"—திருவாசகம்.

"முத்தியும் ஞானமும் வானவர் அறியா முறைமுறை பல நெறி களும் காட்டிக், கற்பனை கற்பித்த கடவுளை"—சுந்தரர் தேவாரம்.

14. காணும்......தோணும்படிக்கு — என்னுடைய கரணங்கள் அனைத்தும் எதைக்கண்டாலும் அஃதெல்லாம் பேரின்பக்காட்சியாகவே தோன்றும் வண்ணம். "காணும் கரணங்களெல்லாம் பேரின்பமென" — திருவாசகம்.

"பாவனையாய கருத்தினில் வந்த பரா வமுதாகாதே"—"எங்கு நிறைந்தமுதூறு பரஞ்சுடர் எய்துவதாகாதே, ஈறறியாமறையோ னெனையாள எழுந்தருளப் பெறிலே."—திருவாசகம்.

15. வேயாரும் தோளியுமை—மூங்கிலை யொத்த தோளினை யுடைய உமாதேவி.

தாயாரின் மேன்மைத் தயாபரனே—தாயைக்காட்டிலும் மேலான தயவுடைய பிரானே.

நனிநாகம் ஈங்கோய்மேல் நாடித் தவமே
இனிதாக யானிருக்க என்றும்—பனிமேவு
செஞ்சடையாய்! நீயல்லால் செய்வார் பிறரில்லேன்
நெஞ்சடையாய் இப்போழுதே நீ. 16

நீவேத நான்கனையும் நேர்ந்துரைத்த பாங்கினிலென்
நாவேத மத்தனையும் நற்றமிழால்—பாவோத
நாளும் கனிந்தருளாய் நல்லீங்கோய் மாமலைமேல்
தாளும் கனிந்தருளெந் தாய். 17

தாயும் உனையல்லால் தாரணியில் வேறில்லேன்
வாயும் உனையல்லால் வாழ்த்திடுமோ?—பாயும்
மழவிடையாய்! ஈங்கோயாம் மாமலைமேல் என்றும்
விழவுடையாய்! வென்றேன் விதி. 18

விதிமுறையால் நின்னையே வேண்டிப் பிரமன்
பதினனவே போற்றிப் பணியக்—கதியருளிச்
சோதிப் பிழம்பான தூயஉருத் தோற்றியருள்
ஆதிக்குன் றமீங்கோ யாய்! 19

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து", "தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"—திருவாசகம்.

பேயாரும்—பேய்க் கணங்கள் நிறைந்த.

வெஞ்சுடலை—எரி மிகுந்த வெப்பத்தையுடைய சுடுகாடு. "கானத் திரவில் எரிகொண்டாடும்"—ஞானசம்பந்தர். ஈங்கோய் மலை.

நஞ்சுடலை—நஞ்சு பொருந்திய தேகத்தை.

காயாய்—அழித்திடாய்.

16. நெஞ்சடையாய்—எனது உள்ளத்தில் புகுவாயாக.

17. முதல் இரண்டடி. வேதம் நான்கனையும் நீ எப்படி வடமொழியில் உரைத்தாயோ அவ்வாறே அடியேனும் அந்த வேதங்களின் உட்கருத்தைத் தமிழ்ப் பாடல்களால் வெளிப்படுத்துமாறு அருள் செய்வாய். "வேதம் தமிழால் விரித்தார்"—பெரிய புராணம்.

18. விழவுடையாய்—உற்சவங்கள் கொண்டாடப் பெறுபவனே.

19. இத்தலத்தில் முன்பு பிரமதேவர் தவம்செய்து ரஜோகுணம் நீங்கப்பெற்றுச் சிருஷ்டியதிகாரத்தையும், சத்தியலோக வாழ்வையும் அடைந்த புராண வரலாறு இப்பாடலின் குறிப்பு.

ஆய்ந்தெடுத்த தேனாலோர் ஆயிரமாண் டாட்டியுனை
ஏய்ந்திருந்தே பூசித்தார் ஈயுருவே—தோய்ந்தன்று
சீரார் அகத்தியராம் தென்தமிழின் மாமுனிவர்
காரார்ஈங் கோய்மலையாய்! கா. 20

காலன் உருண்டோடக் கால்கொண்டு நீயுதைத்தாய்
வேலன் தனைக்கொஞ்சும் மேலவனே!—சீலன்யான்
அன்றெனினும் நாயனையேன் ஆர்வமுடன் நின்னீங்கோய்க்
குன்றதனிற் சேர்ந்தேன் குறி. 21

குறியோ டடையாளம் கோயில் முதலாம்
நெறியோ டனைப்பலவும் நிற்பித் — தறியும்
வகைகாட்டி வையத்தை வாழ்விப்பாய் நாளும்
நகைகாட்டீங் கோய்மலையாய்! நன்கு. 22

நன்குனது தாள்போற்றி நாளும் மகிழ்ந்துறைதல்
என்குறியாக் கொண்டே இவண்மேவி — என்கண்கள்
நீர்பொழிய மெய்விதிர்க்க நிற்கின்றேன் நின்திருமுன்
கார்பொழியீங் கோய்மலையாய்! காண். 23

---

20. இப்பாடலின் குறிப்பு: "அகத்திய முனிவர் ஈ வடிவம் பெற்றுத் தாமே ஒவ்வொரு மலரினின்றும் எடுத்துச் சேர்த்த தேனைக் கொண்டு தேவ மானத்தால் ஆயிர வருடம் அபிடேகம் செய்து வந்தார். இப்போதும் அகத்திய முனிவர் ஈ வடிவோடு இம்மலையிலிருந்து எந்நாளும் பூசித்து வருகின்றார். இதனாலும் இம்மலைக்கு ஈங்கோய் என்று பெயர் வந்தது"—இது தலபுராணக் கொள்கை.

21. அன்றெனினும்—அல்லேன் என்றாலும். காலன் உருண்டோட... — "கூற்றம் திரியாமற் செற்றான் சிலம்பு"—நக்கீரதேவர்.

22. "குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே" என்ற அப்பர்
தேவாரக் கருத்தை இப்பாடல் கொண்டுள்ளது.

23. என்குறியாக் கொண்டே—எனது லட்சியமாகக் கொண்டே.

இவண்—இம்மலைமீது.

கார் பொழியும்—மேகங்கள் மழையாகப் பொழிகின்ற.

காண்பேனே நின்னெழிலைக் காதல் மிகப்பருகிப்
பூண்பேனே நின்னடியைப் போற்றியருள் — மாண்புமிக
என்றென்றே ஏங்கிடுவேற் கீந்தனைகாண் ஈங்கோயாம்
குன்றின்றே ஏறிமகிழ் கோள். 24

கோளும் குறைசெய்யா; குற்றேவல் தாம்செய்யும்;
நாளும் அடியவர்பால் நாடியவர் — கேளாகும்
காண்பாய்கொல் என்றுரைத்த காழியரீங் கோய்மலையை
மாண்பாய்முன் பாடினராம் மன். 25

மன்னுயிர்கள் யாவும் மரணமுறச் செய்வோனும்
தன்னுயிரே மாளாத் தரம்பெற்றான் — உன்னித்
தவமிருந்துன் பாலென்பார் தாவில்குன் றீங்கோய்
நவமிகுந்த நாயக!முன் னாள். 26

முன்னாளிற் கௌதமர்பால் மூண்டதொரு சாபமுறும்
மன்னன இந்திரனும் வந்திந்த — இன்னுலகில்
ஈங்கோய்நற் குன்றதனில் ஏய்ந்து முனிதன்னால்
தீங்கோயப் பெற்றான் திறம். 27

---

24. கோள்—கிரகம் அல்லது நாள்.

25. கோளறு பதிகம் முன்பு பாடிய திருஞானசம்பந்தர் ஈங்கோய் மலையையும் பாடியுள்ளார் என்பது கருத்து.

கோளும்—கோள்களும். கண் என்பதற்குக் கண்கள் என்பதுபோல.

26. இயமன் இம்மலையில் தவம் செய்து அழியாவரம் பெற்றமை புராணக் கொள்கை.

நவமிகுந்த—புதுமையுமிகுந்த.

27. இப்பாடலின் புராணக்குறிப்பு: அகலிகைபால் தான்செய்த குற்றத்திற்காகக் கௌதம முனிவரால் சபிக்கப்பெற்ற தேவேந்திரன், நாரதரின் சொற்கேட்டு இந்த ஈங்கோய் மலையை யடைந்து, அப்போ திங்கு ஈ வடிவாய் இருந்துவந்த அகத்திய முனிவரிடம் மந்திரோபதே சம் பெற்றுத் தினம் ஆயிரத்தெட்டு முறை ஜெபித்து மரகதாசலப் பெருமானைத் தேவமானத்தால் ஆயிரம் ஆண்டுகள் வழிபட்டுத் தனது ஆயிரம் யோனிகளும் ஆயிரம் கண்களாக மாறப்பெற்று மகிழ்ந்தான். அதன்பின் இந்த மலையின் மேலுள்ள ஆலயத்தின் கோபுரத்தையும் பிரகாரத்தையும் நவரத்தினங்களால் புதுப்பித்துஒவ்வொரு வைகாசித் திங்களிலும் பெரு விழாவும் செய்வித்தான்.

திறம்என்னும் சாதனத்தால் சேர்ந்திமயச் சென்னிப்
புறம்அடைந்த பேறெனினும் பொய்யும் — மறவினையும்
சேர்பிறவி வெல்லுவரோ தேர்ந்தீங்கோய் மாமலைமேல்
சார்துறவி தாள்பணியா தார். 28

தாராரும் நான்முகனும் சார்ந்தே தவஞ்செய்து
சீராரும் பேறெல்லாம் சேர்ந்தனனால் — பாராரும்
ஈங்கோய் எனுமலைதான் இன்பமுடன் எந்நாளும்
தேங்கோய்வுக் கேற்றதெனத் தேர். 29

தேர்ந்தேஈங் கோய்மலைமேல் சீர்முனிவர் தேவருடன்
சேர்ந்தே அருந்தவந்தான் செய்தனரால் — சார்ந்தேதான்
எண்ணரிய சித்தியெலாம் எந்நாளும் ஏய்ந்திருப்பார்
கண்ணறியச் சொன்னேன் கதி. 30

கதியும் பழவினையால் காசினியில் வந்த
விதியும் இடர்பிறவும் வெல்வோம் — மதியுடனே
நீரும் புனைந்தசடை நின்மலன்ஈங் கோயமலைமேல்
சாரும் சிவனையடைந் தால். 31

---

28. இப்பாடல் இவ் ஆண்டு 1953-மே மாதயிறுதியில் இமயத்தின் இறுதியுச்சியாகிய எவரெஸ்ட் சிகரத்தின்மீது இருவர் ஏறி உலகப் புகழ் பெற்றவர்களாக விளங்குவதைக் குறிக்கிறது. செயற்கரும் செய்கை செய்த வீரர்களாகிய டென்ஸிங் நார்க்கே, ஹிலேறி ஆகிய இரண்டு வீரர்களும் அந்தச் செய்கையினலே மட்டும் பொய்யும் மறமும் சேர்ந்த பிறவிக்கடலை நீந்த முடியாது என்பதும், ஆனல் அவர்கள் ஈங்கோய்மலையைச் சேர்ந்து அங்குள்ள தவமுனிவராகிய அடியார்களைச் சார்ந்து பணிந்தால் அக்காரியம் கைகூடும் என்பதும் இதன் கருத்து.

திறம்—மனேதிடம், தேகபலம்.

உடலின் ஏற்றத்தினும் உள்ளத்தின் தாழ்வே சிறந்தது என்பதாகும்.

29. பிரமன் இங்கு தவம் செய்து நலம் பெற்றமை குறிப்பு.

தேங்கோய்வுக்கேற்றது—தேங்கி நிற்கின்ற மனச்சாந்திக்குத் தக்கது.

தேர்—நீ தெளிவாயாக.

30. கண்ணறிய—என் கண்ணுல் கண்டவாறே.

31. கதியும்......சிவனையடைந்தால்— "வருந்துயரம் தீர்ப்பான் மலை" — திருவீங்கோய்மலை எழுபது.

தாலாட்டித் தன்குழவிச் சண்முகனைச் சார்ந்தணைத்துப்
பாலூட்டு கின்றதொரு பார்வதியும் — மாலோட்டும்
மாதவம்செய் திங்கோயை மாதவள்ஈங் கோய்க்குன்றென்(று)
ஓதவும்பெற் றுற்றாள் ஒளி. 32

ஒளியார் மரகதமாய் ஓங்குமலை ஈங்கோய்க்
களியார் நினதருளைக் காண — எளியேனுன்
ஓடோடி வந்தேன் உனைக்கண்டேன் உள்ளுவந்தேன்
கூடோடு தேனிருக்கும் கோன். 33

கோனேயன் றோர்குரங்கு கொட்டிடவே கூடொன்றின்
தேனே வழிந்துன்மேல் தேங்கஅதை — மானிடருள்
சுப்பிரபன் ஆக்கினாய் தொன்மலையீங் கோயாய்முன்
எப்பிரம னும்வியக்க வே. 34

வியந்தேனின் மின்னொளியை வேறுகதி யின்றி
நயந்தேனின் தண்ணருளை நாடிப் — பயந்தேய
இவ்வுலகப் பாசமதை ஈங்கோய்க்குன் றுயகன்றேன்
எவ்வுலகத் தாக்கலுமஞ் சேன்! 35

---

32. பார்வதியும்......ஒளி— பார்வதி தேவியும், மயக்கத்தை நீக்கு கின்ற பெரிய தவத்தைச் செய்து, ஈங்கோய் மலையைச் சத்திமலை என்று வழங்கப் பெறும் பேற்றையும், சிவனின் ஒளிமிகுந்த இடப் பாகத்தையும் பெற்றாள்.

மாது அவள் ஈங்கோய் என்று பிரிக்க. அதாவது சத்திக்ஷேத்திரம்.

உமாதேவி இம் மலையில் தவம் செய்து இறைவனின் இடப்பாகத்தையும் சிவனினும் உயர்ந்த சிறப்பையும் பெற்றது புராணக் குறிப்பு.

33. கூடோடு—கூட்டினின்று வழிந்தோடுகின்ற. "அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ" — திருவாசகம்.

34. முன்பு, குரங்கொன்று இம் மலைமேலிருந்த புளியமரமொன்றின் கிளையிலிருந்த தேன்கூட்டைப்பற்றி இழுத்தது. அத்தேன்கூடு கைதவறி மரகதலிங்கத்தின்மீதுவிழ அதிலிருந்து தேன்ஒழுகி இறைவனுக்குத் தேன்அபிடேகமாகியது. இந்தச் சிவபுண்ணியச் செயலுக்குப் பரிசாக அக்குரங்கை அடுத்தபிறப்பில் மரகத தேசத்தில் சுப்பிரபன் என்னும் மன்னனாகப் பிறக்கச் சிவபிரான் அருள்செய்தார் என்ற இப்புராணக் கதையே இப்பாடலின் குறிப்பு.

அதை—அக்குரங்கை.

எப்பிரமனும் வியக்கவே—எந்தப் பிரமாவும் ஆச்சரியப்படும்படி.

35. பயந்தேய — அச்சம் நீங்க.

அஞ்சேல் இனியஞ்சேல் ஆரெதிர்த்த போதிலுமே
கெஞ்சேல் இனிக்கெஞ்சேல் கேளிரென — மஞ்சேறும்
மாமலையாம் ஈங்கோய்மேல் மாதவனைச் சார்ந்தனையால்
நீமலையாய் நெஞ்சே! நினை. 36

நினையா திருந்துனது நேர்நில்லா தென்றன்
வினையாதி வெவ்விடரால் வெள்கி — மனையாதி
சாசுவதம் என்றிருந்திங் கோய்மலையைச் சார்ந்தவெனைக்
காசுவதம் செய்திடுமோ! காண். 37

காணக்கண் கூசுமொளி கக்குகின்ற நற்கவினேய்
பேணக்கை கூப்பியுமுன் பேர்கூவி — நாணத்தை
விட்டுனருள் ஈங்கோயாம் வெற்பதனை வந்தடைந்தேன்
நட்டுனடி போற்றிடவே நான். 38

நான்செய்யுந் தொண்டெனவே நாடோறும் சுப்பிரபன்
தேன்செய்யும் நீராட்டல் செய்துவரத் — தேன்காணன்
அஞ்சிமிகக் காதறுப்பாற் கன்றீங்கோய் மாமலையாய்!
தஞ்சமளித் தேயருள்செய் தாய். 39

எவ்வுலகத்தாக்கலும் — எந்தவுலகத்தினுலும் ஏற்படும் மன அதிர்ச்சி முதலிய இடர்களும்.

36. கேளிரென — சுற்றத்தார் என்று. நீமலையாய் நெஞ்சே நினை—" மனக்கவலை தீர்ப்பான்மலை "—திருவீங்கோய்மலை எழுபது.

மஞ்சேறும் — மேகம் தவழும்.

37. வெள்கி—(தோல்வியால்) நாணமுற்று. சாசுவதம்—உறுதியாக நிலைப்பது. காசுவதம் செய்திடுமோ—பணம் உள்ள பொழுதும் இல்லாத பொழுதும் துன்புறுத்துமோ.

காண்—அசை.

38. நட்டு—அன்பினுல் நண்புடையனுகி.

39. முற் பிறப்பில் குரங்காக இருந்து தேன் கூட்டைக் கைதவற விட்ட சிவபுண்ணியத்திற்காக மறுபிறப்பில் சுப்பிரப மன்னனுகப் பிறந்தவன், தனக்குகந்த தொண்டாகக் கருதி நாடோறும் மரகதாசலேசு வரருக்கு ஒரு குருணித் தேனைக் கொண்டு அபிடேகம் செய்துவந்தான். அப்போதொரு நாள் பூசைக்குரிய தேன் கிட்டாமல் போகவே, அவ் அரசன் தனது காதுகளை அறுத்துக்கொள்ள முற்படும்போது, சிவபெருமான் அவனுக்குக் காட்சியளித்து அவனைத் தம் சிவகணத் தலைவனுக்கிக் கொண்டார் என்ற தல புராணச் செய்தி இப்பாடலில் காணப்படுகிறது.

செய்தவராம் ஒன்பதின்மர் சித்தர் நனியடைந்திட்(டு)
உய்தவமே செய்வதற்கும் உற்றதலம் — செய்தவக்குன்(று)
ஈங்கோய்தான் என்றுரைத்த எம்பெருமான் என்றனைநீ
நீங்காய்காண் என்றருள்வாய் நேர். 40

நேரும் பொழுதெல்லாம் நின்மலனைச் சார்ந்தவன்றன்
பேரும் புகழ்முழுதும் பேசிடவே — சேருவீர்!
வையகத்தீர் என்றழைத்தேன் வாழும்ஈங் கோய்மலைக்கே;
பொய்யகத்தீர் நீரகன்றே போம். 41

போம்போதிவ் வையகந்தான் போற்றிடுமோ தூற்றிடுமோ
ஆம்போதவ் வுண்மைதான் ஆரறிவார்? — சாம்போது
காவாயீங் கோய்மலையாய் என்றழைத்தக் கால்அவனும்
ஆவாஎன் றேவருவான் ஆங்கு. 42

ஆங்கோயும் காலெனக்கே ஆறுதலாய்க் காலளிக்க
ஈங்கோய்க்குன் றுயல்லால் யாவருளர்? — பாங்கார
இந்நாளில் நின்சரணம் எய்தியஇவ் வேழைதனக்(கு)
அந்நாளில் செய்வா யருள். 43

---

40. இப்பாடலின் குறிப்பு: கயிலையில் காட்சி தந்த சிவபிரானிடம் நவ சித்தர்கள் என்னும் ஒன்பது முனிவர்கள், தமது தவத்திற்கேற்ற தலம் எது என வினவ, அவர் இம் மரகத மலையே சிறந்ததெனக் கூறினர். அதன்படி அவ்வொன்பதின்மரும் இங்குவர, ஒரே முடியை யுடைத்தாயிருந்த இம்மலை ஒன்பது முடிகளுடன் காட்சியளித்தது. ஒன்பது முனிவரும் முறையே ஒவ்வொரு முடியின் மீதிருந்து ஆயிரம் வருடங்கள் அருந் தவம் செய்து மரகத இலிங்கத்தைப் பூசித்துச் சிவன் முத்தர்களாய் இன்றும் இங்கே உலவியும் நிலவியும் வருகின்றனர் என்பது இத் தலபுராணம்.

41. பொய்யகத்தீர் நீர் அகன்றே போம்—பொய் உள்ளத்தை உடையவர்கள் இங்கே வரவேண்டாம். விலகிப் போவீராக.

"மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்"—திருப்பல்லாண்டு.

42. போம்போது—உயிர்போகும்போது.

உயிர்போகும்போது நிகழ்வதை யாரும் அறியமுடியாது—"செத்தபோது யாருமில்லை, சிந்தையுள் வைம்மின்கள்"—சுந்தரர் தேவாரம்.

"சங்குற்ற மேனிச்செல்வா சாகுநாள் நாயேன் உன்னை
எங்குற்றாய் என்றபோதால் இங்குற்றேன் என்கண்டாயே"
— அப்பர் தேவாரம்.

43. காலளிக்க—திருவடிக் காட்சிதர.

அருளார் அமுதத்தேன் ஆருய் அடியார்
தெருளார்ந்த சித்தமெலாம் தேங்கி — இருளாரும்
வையமெலாம் வாழ்விக்கும் மாமலையீங் கோயடையின்
ஐயமெலாம் தீர்வாய் அறி. 44

அறியேன் அடியேனும் ஆறறிவே யார்ந்தும்
சிறியேன் அரிதேதும் செய்யேன் — வறியேனுய்
வல்லவனல் லேனீங்கோய் மாமலையாய் ! நின்சரணம்
நல்லவனே ! இன்றடைவேன் நான். 45

நானேஇவ் வையமிசை நாளுந் தழைத்திடவும்
கோனேயென் றெல்லோரும் கூவிடவும் — தானேகேள்
என்றென்றும் எண்ணிமிக எய்த்தேனை ஈங்கோயாம்
குன்றென்று மேவுறைவாய் கொள். 46

கொள்ளாய் எனைக்கூவிக் கோதில் அடியவர்பால்
எள்ளாயோர் பொய்யனென என்றனையும் — பிள்ளாய்நீ !
வாராயென் றேயழைத்தீங் கோய்மலைமேல் வாழ்வருளிச்
சீராய் இருக்கவெனைச் செய். 47

செய்யத் திருப்பூசை சேர்ந்தீயின் ஓருருவில்
உய்யத் துணிந்தோனுய் ஓர்முனிவன் — ஐயமுனம்
தேன்திரட்டி நின்னுருமேல் தேக்கினன்ஈங் கோய்மலையாய் !
நான்திரட்டிப் பாடினன்இந் நாள். 48

நாளென்ப தெல்லாம்நின் நாமம் நவின்றிடுநாள் ;
ஆளென்ப ரெல்லாம்நின் ஆளன்ருே ? — வானெனவே
கூசும் ஒளிசேர் குவையாம் மரகதம்காண்
பேசும்ஈங் கோய்மலை ! நின் பேர். 49

44. ஐயமெலாம்—உலகத்தில் நம் வாழ்வில் தோன்றித் துன் புறுத்தும் சந்தேகங்களெல்லாம்.

45. சிறியேன் அரிதேதும் செய்யேன்—அரிய காரியங்கள் எவையும் ஆற்ற முடியாத சிறியேன். "சிறியர் செயற்கரிய செய்கலாதார்"— திருக்குறள்.

48. அகத்திய முனிவர் முன்பு ஈ வுருவம் அடைந்து நாள்தோறும் தாமே திரட்டிய தேனைக்கொண்டு நின்னைப் பூசித்தார். நான் இன்று தமிழ்ப் பாடலைத் திரட்டிஉன்னைப் பாடுகிறேன்.

சேர்ந்து ஈயின் எனப் பிரிக்க.

49. குவையாம் மரகதம்—மரகதக் குவியல். "மரகதக் குவால் மாமணிப் பிறக்கம்"—திருவாசகம்.

பேரா யுனக்கமையும் பீடுறுமைந் தாமெழுத்தை
நேரா யெனக்குலகில் நீயுரையாய் — சீராரும்
ஆணிப்பொன் அம்பலத்தாய்! ஆதிமலை ஈங்கோயாய்!
பேணிப் பணிந்தனனோர் பேய். 50

பேய்வடிவோன் சாபமதும் பீடுசுதா புட்கரணித்
தூய்நீரால் அன்றோ தொலைந்ததுகாண் — ஏயுமெழில்
மெத்தவுள தீர்த்தமுறும் மேலாம்ஈங் கோய்மலைமேல்
புத்தமுதம் உண்டாம் புகல். 51

புகல்வேறு யானில்லேன் என்றுபுகன் றோடி
இகல்வேரைத் தான்களைய எண்ணில் — அகலுங்காண்
தேவிசரம் என்றபுகழ்த் தீர்த்தமலை ஈங்கோயை
மேவிநிதம் சார்வாய் மிக. 52

மிகுந்திடுமோர் அன்பாலே மேவிமுனி மூழ்கிப்
புகுந்திடலும் ஈயுருவாய்ப் போகத் — தகுந்ததிரு
சர்ப்ப நதிமூழ்கிச் சார்வாரீங் கோய்மலைமேல்
கர்ப்ப மதிலூரூர் காண். 53

---

50. பீடுறும் ஐந்தாம் எழுத்தை எனப்பிரிக்க. பேராயுனக்கமையும்—உன் நாமமாக அமைந்த.

51. பிருகு குலத்தில் பிறந்த அக்கினிசன்மா வென்னும் அந்தணரின் சீடன் ஒருவன் வீதிஹோத்திரன் என்னும் பெயருடையான் தன் குருவீட்டுச் சிரார்த்தத்திற்காகக் கொண்டுபோன பாலில் ஒரு சிறிது பாலைத் தான் உட்கொண்டதால் அவன் தன் குருவால் பேயாகச் சபிக்கப்பட்டான். அவன் அதன்பின் இம்மலையையடைந்து இதன் அருகில் உள்ள சுதாபுட்கரணித் தீர்த்தத்தை ஸ்ரீ கோபில முனிவரால் புரோதாயம் செய்யப்பெற்றான். அதன் பலனாக அவன் பேயுருவம் மாறி முன்னுருவம் பெற்றுச் சிவானந்தப் பேறுபெற்றான். இது தல புராணக் குறிப்பு.

52. இதில் இம் மலையைச் சார்ந்த தேவிசரம் என்னும் தீர்த்தப் பெருமை கூறப்பட்டுள்ளது.

புகல் வேறு—வேறு புகலிடம்.

53. இம் மலைமீதுள்ள மரகதேசுவரனைப் பூசிக்கும் பொருட்டு ஈ வடிவம் வேண்டி அகத்திய முனிவர் இதன் அருகிலுள்ள சர்ப்ப நதியில் மூழ்கினார். அவரது எண்ணம் அத்தீர்த்தத்தால் நிறைவேறியது.

கர்ப்பம் அதில் ஊரூர் எனப் பிரிக்க. காண்—அசை.

காணும்ஈங் கோய்மலையின் தென்பாற் கவினுரத்
தோணும் இயமநீர்த் தூய்மையால் — பேணுபுகழ்
முன்னோர்க்கு நற்கதிதான் மூண்டதனால் முன்னேநீ
பொன்னாரீங் கோய்மலைக்கே போ. 54

போகமெலாம் துய்த்திருந்து பூவுலகில் வாழ்வதற்கு
வேகமுடன் விட்டுணுநீர் மேவுமெழில் — நாகமாம்
ஈங்கோய்நீர் ஏய்ந்திடுவீர் ஏத்திடுவீர் எம்பெருமான்
கோங்கோயாத் தாளின் குணம். 55

குணம்பொல்லேன் வாழ்வின் குறிபொல்லேன் ஆனால்
பணங்கொள்வாய்ப் பாம்பணியும் பண்ப!—மணங்கொள்நின்
பொற்றாளைப் போற்றுதற்குப் போந்தேனீங் கோய்மலையாய்
நற்றாளைத் தந்தாள் நனி. 56

நனிபாயும் பொன்னி நதியாகும் தீர்த்தம்
இனிபாய்ந்திட் டாடி இனிதே — கனிவாய்சேர்
அம்மையுடன் அப்பனுறும் ஈங்கோய்க்குன் றார்ந்துதொழின்
செம்மையுடன் சீருமுறும் சேர். 57

சேர்ந்தேநல் இந்திரனின் தீர்த்தத்தில் நீராடி
ஆர்ந்தே திருக்கோயில் ஆதிமுதல்—சார்ந்தே
அமைந்திடுமீங் கோய்மலையை ஆர்வமுடன் போற்றி
அமைந்திடுவேன் தொண்டருளே யான். 58

யான்பெற்ற இன்பமெலாம் எய்துகஇவ் வையமென
வான்பெற்ற இன்பமது வாய்ந்தயான் — நோன்புற்றே
ஆற்றுப் படுத்துகின்றேன் ஆதிமலை ஈங்கோய்க்கே
தோற்றுப் படுத்தவரைத் தொட்டு. 59

---

54. இதில் இயம தீர்த்தத்தின் பெருமை கூறப்பட்டது.

55. இதில் விஷ்ணு தீர்த்தம் குறிக்கப்பட்டது.

56. "குலம் பொல்லேன் குணம் பொல்லேன் குறியும் பொல்லேன்"—அப்பர் தேவாரம்.

பணம் கொள்வாய்ப் பாம்பு—படத்தைக் கொண்ட பாம்பு.

57. அம்மையுடன் அப்பனுறும் அர்த்தநாரீசுவரர் கோலத்தைக் குறிப்பது. தொழின்—தொழுதால்.

58. இதில் இந்திர தீர்த்தம் குறிக்கப்பட்டது.

59. "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"—திருமந்திரம்.

தொட்டாலும் நற்பிரமத் தூயதீர்த் தம்மேனி
பட்டாலும் நின்வினைகள் பட்டிடுமால் — விட்டோயத்
தீவினைப்பா ரங்கழிப்பாய் சேர்ந்தீங்கோய் மாமலைமேல்
கோவினைப்பா டிக்கரங்கள் கூப்பு. 60

கூப்பிக் கரங்களுனைக் கூடிப் பணிந்திடுமோர்
வாய்ப்பிற்கே யான்பலநாள் வாடினேன் — நாய்ப்பித்தன்
ஆதலினால் இன்றருளாய் ஆர்வமுடன் ஈங்கோய்க்குன்(று)
ஓதலினால் வாழ்வேன் உயிர். 61

உயிரோ வியந்தீட்டி உள்ளக் கிழியில்
அயரா வணமுமையின் ஆற்றல் — பயில்வோனே !
நீயிருக்கும் ஈங்கோயாம் நீள்மலைமேல் நின்றிருக்கும்
தாயிருக்கக் கண்டேன் தரு. 62

தருவாகி வெம்பிறவி வெப்பம் தணிக்கும்
உருவாகி யோங்கும் உமையை — மருவாநீ
மாட்சிமலை ஈங்கோய் மரகதமா யோங்கியொளிர்
காட்சிதனைக் கண்டனவென் கண். 63

கண்ணால் முகந்துனது காதற் கவினருளை
உண்ணாநின் றேயுருகி ஓதினேன் — பண்ணாரும்
இன்மொழியாள் பாகா ! ஈங் கோய்மலைமேல் எம்மானே !
நன்மொழியாய் செய்யாய் நலம். 64

ஆற்றுப் படுத்துகின்றேன்—வழிகாட்டி யனுப்புகிறேன்.

தோற்றுப் படுத்தவரை—வைய வாழ்வில் பல துறைகளிலும் முயன்று தோல்வியுற்றுக் களைத்து வீழ்ந்துள்ளவர்களை.

60. இதில் பிரமதீர்த்தத்தின் பெருமை கூறப்பட்டது.

62. உனது மனமாகிய துணியில் உமாதேவியின் வடிவத்தின் சித்திரத்தை வரைந்து, அயர்வில்லாமல் அவளது சத்தி லீலைகளைப் பயின்று கொண்டிருப்பவனே. "உயிராவணம் இருந்து உற்று நோக்கி உள்ளக் கிழியின் உருவெழுதி"—அப்பர் தேவாரம்.

"எரிதரங்கம் உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே." ஸ்ரீ குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.

உனது மலையில் கற்பகம் போன்ற உமாதேவியாகிய தாய் இருக்கும் காட்சியையும் கண்டேன்.

63. தருவாகி—கற்பக விருட்சமாகி. கண்—கண்கள். "பேதைக் கமர்த்தன கண்"—திருக்குறள் (1084)

நலமென்ப துன்றனருள் நானிலத்தி லென்றும்;
குலமென்ப துன்கோயில் கூடி — வலம்வந்து
வாழ்த்துதலே என்றும் வளமுடனீங் கோய்மலைமேல்
தாழ்த்திடுவேன் என்புன் தலை. 65

புன்றலையேன் ஆயிடினும் போற்றிமலை யீங்கோய்மேல்
என்றலைவா! நன்றேறி ஏய்ந்தனன்யான் — இன்றருளிக்
கைந்நீட்டி நன்கழைத்தே கால்காட்டின் காலமெலாம்
மெய்ந்நீட்டி வாழ்ந்திடுவேன் மேல். 66

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் போலுனது
பாலிருந்தும் பாங்கறியாப் பாதகராய் — நூலிருந்தும்
நின்பெருமை தானறியா நீசரையேன் நீபடைத்தாய்
அன்பருமை ஈங்கோய்க்குன் றாய். 67

குன்றுகளில் ஈங்கோய்மேல் கூடி மகிழ்வாயே
மன்றுகளுள் தில்லைசேர் மாண்பேபோல் — மென்மொழியாள்
தெள்ளமுதின் இன்மொழியாள் தேவி யறியாது
கள்ளமுடன் வைத்தாய்கங் கை. 68

---

65. புன்தலை—இழிந்ததலை.

66. கால் காட்டின்—திருவடிக் காட்சி தந்தால்.

67. "மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல்லவர்"—திருக்குறள்.

உனது பக்கத்திலிருக்கும் பாக்கியம் பெற்றும், அரிய வேதாகம புராண நூல்கள் படிப்பதற்குத் தம் அருகிருந்தும், நினது உண்மைப் பெருமையை யுணராத பாதகராகிய நீசரை நீ ஏன் படைத்தாய் என்பது கருத்து. இது, ஆத்திகராயிருந்தும் அரும் நூல்கள் பயின்றும் இறைவன் கோயில்களிலும், இறைவன் சொத்து முதலிய விடயங்களிலும் அபசாரம் செய்து அருநரகிற்கு வழிதேடும் சமுக்கர்களைக் கண்டித்தவாறுணர்க.

"கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீலமாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே".
— அப்பர் தேவாரம்.

அன்பும் அருமையும் உடைய ஈங்கோய் மலையாய் எனக்கொள்க.

அன்பர் (விரும்பும்) உமைதனக்கு உரிய ஈங்கோய் மலையாய் எனவும் கொள்க.

கங்கை தனைச்சடைமேல் காதலுடன் வைத்தவளை
மங்கை யுமைகாணு வாறருளிச் — சங்கையோ(டு)
அவ்விருவ ரும்ஊட ஆர்ந்தேஈங் கோய்மலைநீ
செவ்விபொன்னி யையணைவாய் சீர். 69

சீராருன் சேவடியே சேர்ந்துமகிழ்ந் தெந்நாளும்
தீராத தீவினைநோய் தீர்ந்தனன்யான் — பாராரும்
தீயபொருள் தேடுகிலேன் சேர்ந்தீங்கோய் மாமலைமேல்
மேயபொருள் கண்டேன் மிக. 70

மிகவேநின் தொண்டரைநீ மேலிருத்தி வையம்
நகவேநற் கூத்தாட்டும் நாத! — தகவேயான்
பேணிக்கை கூப்பிநின்று பேசருமீங் கோய்மலைமேல்
காணிக்கை இன்றடைந்தேன் கை. 71

கைதலைமேல் வைத்தேத்திக் காதலுறக் கண்களில்நீர்
பெய்தலையே கொண்டுள் பெரிதுவந்து — பொய்யகல
ஆர்த்துனருள் ஈங்கோய்க்குன் றூர்வுற யானடைந்தேன்
தீர்த்தெனது பாவமருள் செய். 72

செய்வதெலாம் யானுனது சேவடிக்கே பூசனையாம்;
உய்வதெலாம் நின்புகழே ஓதிடவே — ஐவருமே
இன்றிருப்ப தெல்லாம்பே ரின்புறவே; குன்றீங்கோய்
நின்றிருப்பாய் சொன்னேன் நினை. 73

---

69. மங்கையுமை யறியாமல் கங்கையைச் சடைமேல் வைத்த நீ அவ்விருவரும் ஐயுற்று ஊடல் கொள்ளுமாறு நின்மலையருகில் ஓடும் பொன்னியென்னும் மங்கையை யணைவதுபோல் விரும்பி நிற்கின்றாய்.

71. காணிக்கையின்றி யடைந்தேன் காண். இன்றி என்னும் வினையெச்சம் இன்று எனத்திரிந்து நின்றது.

> " புகவே...............
> தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மைஎப் புன்மையரை
> மிகவேவுயர்த்தி விண்ணோரைப் பணித்தியண்ணு அமுதே
> நகவேதகும் எம்பிரான் என்னைநீ செய்த நாடகமே"
>
> — திருவாசகம்.

72. எனது பாவம் தீர்த்து அருள்செய் என முடிக்க.

73. ஐவருமே—ஐந்து புலன்களும்.

அவை இன்று என்பால் இருந்துவருவது சிற்றின்பம் துய்க்க அல்ல; நின் பேரின்பம் துய்க்கத்தான் என்றவாறு.

நினையாத போதுனையான் நீளுலகில் வாழேன்;
புனையாத போதுன்தாள் பொய்த்தேன்; — எனையாளும்
நல்லரசே! ஈங்கோய்க்குன் றுய்நலமார் ஞானியர்தம்
வல்லரசே! காட்டாய் வழி. 74

காட்டாய் வழியெனக்குக் காரரரீங் கோய்மலைக்கே
ஊட்டாய்நின் பேரின்பம் ஓங்கமுதை — வேட்டுவனும்
கண்ணப்பன் போலடியேன் காதலுறக் காணுமுறை
சுண்ணப்பொன் நீற்றிறைவா! சொல். 75

சொல்லாலே சுட்டவொணுச் சோரனுனைச் சாக்கியர்தாம்
கல்லாலே வீசிமுனம் கண்டறிந்தார் — வில்லாலே
முப்புரத்தைத் தாக்குதற்கா மூண்டவன்நீ முன்சிரித்தாய்
இப்புறத்தீங் கோய்மலையாய் ஏன்? 76

ஏனடித்தார் என்றுனக்கு யார்பரிந்தார் வில்விசயன்
தானடித்த போதுனைத்தான் தாங்கியுமே; — நீநடித்த
நாடகத்தை யாரறிவார்? நன்மலையாம் ஈங்கோய்மேல்
வீடகத்தைக் காட்டிடவா வே. 77

"உணர்வின் நேர்பெறவரும் சிவபோகத்தை ஒழிவின்றி யுருவின்கண் அணையும் ஐம்பொறியளவினும் எளிவர அருளினை எனப் போற்றி"— சேக்கிழார். திருஞானசம்பந்தர் புராணம்.

75. வேட்டுவனும்—வேடனாகிய.

"சுண்ணப் பொன்னீற்றன்"—திருவாசகம். ஓங்குஅமுதை என்க.

76. சொல்லாலே சுட்டவொணு—சொல்லாலே சுட்டியறிய வொண்ணாத

"தினைத்தனையும் ஆவதில்லை சொல்லலாவ கேட்பவே" — திருவாசகம்.

சோரன்—திருடன். "ஒளிக்கும் சோரனைக் கண்டனம்" —திருவாசகம்.

சாக்கிய நாயனார், திருவருள் துணைகொண்டு கல்லால் எறிந்து இறைவனைக் காணப்பெற்றமை குறிப்பு.

முன்பு மூன்று புரங்களையும் எரிப்பதற்காக வில்லைக் கையிலேந்திய இறைவனே, நீ அப்போது சிரித்ததன் காரணம் யாது?

இப்புறத்து—இவ்வுலகத்தின்.

77. "ஏன் உன்னை அடித்தார்" என்று யார் உன்சார்பில் முன் வந்து கேட்டார்கள். ஒருவரும் இலர் என்றவாறு.

வில்விசயன்—அருச்சுனன்.

"நகவே தகும் எம்பிரான் என்னை நீ செய்த நாடகமே" —திருவாசகம்.

வீடகத்தை—மோட்சத்தை.

காட்டும்நின் காட்சிதனைக் கண்டனவால் என்கண்கள்
நாட்டுமற் றோர்பொருளிந் நானிலத்தின் — மாட்டுண்டோ?
ஏட்டுச் சுரைக்காய்வைத் தெய்த்தவர்க்கீங் கோய்மலையின்
மாட்டுச் சுரக்காது மன். 78

மன்னுதிருத் தாண்டகத்தை மாதவம்செய் துன்னருளே
துன்னுதிரு வாகீசச் சொல்வேந்தர் — முன்னுலகில்
தந்துதவும் வாறருளித் தானீங்கோய் மாமலைமேல்
வந்துதவும் நீசெய் வழி. 79

வழிகாட்டும் வள்ளலென வாழ்த்திடவே வையம்
விழிகாட்டி ஆண்டிடுவாய் வேண்டிப் — பழிகாட்டும்
வாழ்வழித்துன் வார்கழற்கே வைப்பாயீங் கோய்மலைநான்
சூழ்வதற்கும் செய்யாய் துணை. 80

செய்யாய்! வெளியாய்!நீ என்றடியார் செப்பிடவே
ஐயா! அமர்ந்திடுவாய் அன்புடனே — மெய்யார்குன்(று)
ஈங்கோய்மேல் நின்நிறம்தான் எந்நிறமென் றேயெனக்குப்
பாங்கோயா வண்ணம் பகர். 81

பகரப்போ துன்னும் பாரதனில் இல்லேன்;
அகரப் பொருளாகி ஆர்ந்தாய் — நிகரில்லா

---

78. வெறும் நூலறிவு மட்டும் கொண்டு இளைத்தவர்க்கு இங்கே அருள் சுரக்காது என்க.

ஈங்கோயின் மாட்டுச் சுரக்காது—ஈங்கோய் மலைமீது அருள் சுரக்காது. "நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக"—காரைக்காலம்மையார்.

என் கண்கள் நின் காட்சிதனைக் கண்ட காரணத்தால், அவைகள் மீண்டும் நாட்டப் பெறுவதற்குரிய வேறொரு பொருள் உலகத்தில் உண்டோ (இல்லை) என்க.

79. இதில் திருநாவுக்கரசர் தாண்டகம் பாடி உலகுக்குதவ இறைவன் அருள் செய்தமை கூறப்பட்டுள்ளது.

80. வையம் — உலகத்தை.

விழிகாட்டி—கருணைக் கண் காட்டி.

பழிகாட்டும் வாழ்வழித்து—பழிக்கு ஈர்த்துச் சொல்லும் பொய் வாழ்க்கையை நீக்கி. "நெறியல்லா நெறி" "பொய் யெல்லாம் மெய்யென்று" "செத்துப் போய் அருநரகிடை வீழ்வதற் கொருப்படு கின்றேனை"—திருவாசகம்.

82 உன் நாமம் பகரப் பொழுது இவ்வுலகில் இல்லாதவனேன். "பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன்"—திருவாசகம்.

மாமுனிவர் சேரீங்கோய் மாமலைமேல் நின்விழியால்
காமனைமுன் காய்ந்தவனே கா. 82

காய்ந்தவனே முப்புரத்தைக் காட்டிக் குறுநகைதான்;
ஆய்ந்தவனே தீந்தமிழை அன்றவையில் — தோய்ந்தீங்கோய்
வெற்பதனில் நக்கீரர் வேட்ட எழுபதிலும்
சொற்பொருளின் பந்தனைநீ துய். 83

துய்ப்பதெலாம் உன்றனருள்; தொல்லுலகில் நாயேற்குக்
கைப்பதெலாம் மாயைக் கடுஞ்செயலே — வைப்பதினி
என்மனத்தை வேறெங்கே? ஈங்கோய்க்குன் றாய்நீஎன்
கன்மனத்தை மாற்றாய் கனி. 84

மாற்றிக் கனியாக்கி மாண்பறியா என்மனத்தைத்
தேற்றிச் சிவமாக்கும் தேசிகனே !—போற்றிப்
புகலடைந்தார்க் கென்றும் புனிதமலை ஈங்கோய்
சகலவித இன்பந் தரும். 85

இன்பந்தந் தென்னுயிரீங் கோய்மலையாய் என்றனது
துன்பந் துடைத்தருளித் தோன்றுவாய் — அன்புடனே
நித்தம் தவமிருக்க நேரிலுனைக் காணவரும்
சித்தம் பலமிருக்கச் செய். 86

எல்லாப் பொருள்கட்கும் முதல்வனாக (அகரமாக) ஆர்ந்தவனே.

" ஆனத்து முன்னெழுத்தாய் நின்றார் போலும் "—அப்பர் திருத்தாண்டகம்.

காமனை முன் காய்ந்தவனே — " தீங்கருப்பு வில்லிக்குக் கூற்றானன் வெற்பு"—நக்கீரதேவர் திருவீங்கோய்மலை எழுபது.

83. குறுநகைதான் காட்டி முப்புரத்தைக் காய்ந்தவனே.

அன்று சங்கப் புலவரிடை இறையனார் எனும் புலவராகத் தோன்றியிருந்து தமிழ் நூல்களை ஆராய்ந்தவனே. " நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி "—அப்பர் திருத்தாண்டகம்.

நக்கீர தேவரின் " திருவீங்கோய்மலை எழுபது " என்று பெய்ரிய நூலின் சொற்சுவை பொருட்சுவை முதலியனவற்றைத் துய்ப்பாயாக.

84. கைப்பது—கசப்பது. மாயைக் கடுஞ்செயலே—மாயையின் விகாரச் சேட்டைகளே.

கன் மனத்தைக் கனியாக மாற்றுவாயாக என்றபடி.

86. சித்தம்—மனம். பலமிருக்கச்செய்—ஆற்றலுடன் இருக்குமாறு அருள்க.

செய்யுந் தவந்தான் சிவசிவஓம் என்றிடலே;
கையும் தலைமேவிக் கண்ணருவி — பெய்திடலே
என்றறிந்தே வந்தேன் எழிலார்ஈங் கோயென்னும்
குன்றறிந்தே வந்தேன்நீ கொள். 87

நீகொண்ட பின்னெனக்கு நீளுலகில் ஏதுகுறை?
தீகொண்ட பொன்மேனித் தேசிகனே! — மாகண்டம்
நீலநிறத் தாய்!மலையாம் நீளீங்கோய் மீதமர்ந்த
கோலநிறத் தாய்எனையாள் கோ. 88

கோவே!நின் பொன்னடிகள் கூடிப் பணிந்தெனது
நாவேயுன் நற்புகழை நாடோறும் — பாவாலே
ஓதிப் பணிந்திடயான் ஓடிமலை ஈங்கோய்மேல்
நீதிப் படியேறி னேன். 89

ஏறிப் பணிந்தேற்குன் ஈங்கோய் மலைமீது
மீறிப் பதியின்பம் மேவிடுமால் — தேறிப்
புரிந்திடவே வையம் புகலுகிலேன்; உள்ளம்
திரிந்திடலால் உய்ந்தேன் தெளி. 90

உய்ந்தேன் நினைக்கண்டே ஓங்குமலை ஈங்கோயாய்
பைந்தேனைக் கொண்டாட்டிப் பாடிமனம் — நைந்தேன்
“எழிலதனை யிங்கோய் மலைகாட்டி” என்ற
மொழியினருள் கண்டேன்நின் முன். 91

---

89. நீதிப்படி—ஒழுங்கான படி.

90. மீறி—மேவிட்டு.

வையத்தவர் தேறிப் புரிந்துகொள்ளுமாறு அவ்வின்பத்தை யான் புகலுகிலேன். பேரின்பத்தை எடுத்துரைக்க இயலாமை கூறப்பட்டது.

உள்ளம் திரிந்திடலால்—சித்தம் சிவமானதால்; சீவகரணம் சிவ கரணமாக மாறிய காரணத்தால்.

உய்ந்தேன்—வீடுபேறுபெற்றேன்.

தெளி—நீ தெளிவாயாக.

91. கடைசி இரண்டு அடிகள்.

“ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்” என்று மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய சொற்களின் அருட்சிறப்பை இன்று நான் நேரில் உமது திருமுன்னர் நின்று கண்டறிந்தேன் என்பது கருத்து.

முன்னுளிற் காழியர்கோன் மொய்ம்மலர்த்தாள் போற்றியுமுன்
மின்னார்ந்த சோதியொளிர் மேனிபுகழ் — பொன்னார்
மொழிமேன்மை தன்னை முறையாயீங் கோய்மலைமேல்
விழியாலே கண்டனன்செவ் வே. 92

செவ்வேளை முத்தமிட்டுச் சீராட்டிப் பாராட்டும்
அவ்வேளை யான்காண்டல் ஆகுமோ?—முவ்வேளை
நின்னடியே கண்டீங்கோய் நீள்மலைமேல் நின்றடியேன்
பொன்னடியே போற்றப் புரி. 93

புரியாதுன் சீரெல்லாம் பூவுலகோர் பொய்யில்
தெரியாது வீழ்ந்துழல்வர் தேரார் — சரியாக
உன்னருளை யான்புரிந்திட் டோங்கும் மலையீங்கோய்
மன்னவுனைக் கொண்டேன் மனம். 94

மனமுடனே வாயாதி மற்றுங் கரணம்
தினமும்நின் சீர்புகலத் தேரா;—தனமுறில்யான்
கண்மூடி யாய்த்திரிவேன் கார்தவழ்ஈங் கோய்மலைமேல்
பெண்கூடும் பாகவருள் பெய். 95

பெய்யும் பெருமழையும் பேணும்நற் செங்கதிரும்
உய்யும் படிக்குதவ உன்னியருள் — செய்யுநிறை
தண்ணருளீங் கோய்மலைமேல் தங்கிமகிழ் மாதவ! நின்
கண்ணருளால் ஏழையெனைக் கா. 96

---

92. காழியர்கோன்—திருஞானசம்பந்தப் பெருமான்.

நினது திருவுருவின் ஒளியைக்கண்டு சம்பந்தர் பைந்தமிழால் பதிகம் பாடியதன் மாண்பை இன்று ஈங்கோய்மலைமேல் நின்னைக் கண்டு தரிசிப்பதன்மூலம் நான் நன்கு கண்டறிந்தேன்.

செவ்வே—நன்கு.

93. முவ்வேளை—மூன்று வேளைகளும்.

போற்றப்புரி—பணியுமாறு அருள்புரிவாயாக.

95. தனமுறில்யான் கண்மூடியாய்த் திரிவேன். " தாழ்வெனும் தன்மைவிட்டு தனத்தையே மனத்தில் வைத்து வாழ்வதே கருதித் தொண்டர் மறுமைக் கொன்றீயகில்லார் "— சுந்தரர் தேவாரம்.

96. கண்ணருளால்—கிருபாநோக்கத்தால்.

நாவாயேல் என்றனைத்தான் காக்கக் கடவாரார்?
ஈவாயேல் நின்ருள்குன் றீங்கோயாய்!—நாவாயாய்
ஓங்கலைசேர் மாயப் பவக்கடலை உய்ந்தேறி
ஈங்கலையேன் வையத் தினி. 97

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்கள் வானுறையும்
தெய்வத்துள் உய்வரெனும் செம்மொழிபோல்—கைவைத்துன்
செம்பதமே போற்றிடுவார் சீராரீங் கோய்மலையாய்!
உம்பருளே ஓங்குவரன் றோ? 98

அன்றுமிக யான்கொண்ட ஆர்வமெலாம் இன்றுவரக்
குன்றுதிகழ் ஈங்கோயாய்! கூடியுநான் — நன்றருளைத்
தான்பருகித் தண்டமிழால் சந்தக் கவிபாடித்
தேன்பருகி நின்றேன் தெளி. 99

தெளிதே னுடன்பாலும் செங்கரும்பின் சாறும்
அளிதான் பெறவுனைநீர் ஆட்டி — எளியேன்நான்
தஞ்சமெனத் தண்டமிழால் சார்ந்தேன்ஈங் கோய்மலையின்
செஞ்சரணத் தாள்மலரின் சீர். 100

திருச்சிற்றம்பலம்

—(o)—

---

97. நாவாயாய்—மரக்கலமாக, புணையாக.
"அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை"—திருவாசகம்.
கடவாரார்—கடவார்ஆர்—கடமையுடையவர் எவர்.

98. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" — திருக்குறள்.
உம்பருளே—வானுலகினுள்.

99. இந்நூலாசிரியர் பல்லாண்டுகளாக ஈங்கோய்ப் பெருமானைத் தரிசிக்க "நாளைப் போவேன்" என்றவாறு கூறியே நாடொறும் பெருக்கிவந்த ஆர்வமுழுதும், அவரைத் தரிசித்த தினத்தன்று ஒருங்கு கூடித் திரண்டுறவே, அக்குறிப்பை இப்பாடல் தாங்கிநிற்கிறது. நூலாசிரியனும் நண்பர்களும் ஈங்கோய்ப்பிரானையும் மரகதாம்பிகையையும் முதன்முதலாகத் தரிசித்து மகிழ்ந்து இந்நூலைப் பாடிய நாளாவது 6-7-1953 ஆகும்.

100. அளிதான்பெற—உனது கிருபையைப்பெற.
நீர் ஆட்டி—முழுக்காட்டி, அபிடேகம் செய்து.

॥ ஸ்ரீ: ॥

अभिनन्दनम् - வாழ்த்து

ஸ்ரீ வே. கோபாலய்யங்கார், M. A.
ஸம்ஸ்க்ருதப் பேராசிரியர், அர்ச். சூசையப்பர் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

---

1. कान्तारपुष्पमधुभिर्निपीतक्षारसागरः ।
अभ्यषिञ्चदगस्त्यस्त्वाम् मक्षिकारूपमास्थितः ॥
माधुर्यधिक्कृतमधुं द्राविडं सूक्तिसागरम् ।
पीत्वा स्वहृदयाम्भोजप्रस्रवन्मधुधारया ॥
श्रीबालसुब्रह्मण्योऽयम् इङ्गोयाचलनायक ।
अन्तादिकाव्येनानेन विदधात्यभिषेचनम् ॥

ஈங்கோய் மலைக்கிறைவா!

உப்புக்கடலுண்ட அகத்தியன் ஈ உருத்தாங்கிக் காட்டு மலர்த்தேன் கொண்டு உன்னை மஞ்சனமாட்டினான், அன்று. தேனை இகழும் இனிய தமிழ்க்கடலுண்டு தன்னுள்ளத் தாமரையின் தேன் வெள்ளமாகிய இவ்வந்தாதியதனால் நீராட்டுகிறான், திரு. பாலசுப்ரமண்யம் இன்று.

2. यदृच्छाधूतशाखाग्रगलितैर्मधुबिन्दुभिः ।
आराध्य त्वां कपिः पूर्वं सुप्रभाख्यो नृपोऽभवत् ॥
भक्तिपूर्वं विरचितैः सूक्तैरेतैः सुधान्वितैः ।
स्नपयन्तं कविं देव, किं पदं लम्भयिष्यसि ॥

இறைவ! கிளைமீதிலிருந்து தேன்துளியை வீழ்த்தி நின்னை நினையாது பூசனைசெய்த அக்கபியையும் ஸுப்ரபன் என்னும் மன்னவனாக்கினாய் அந்நாள்!

ஆனால், பக்தியுடன் தொகுத்த இவ்வின்சொல்லமுதாகிய நூலால் நின்னை நீராட்டும் இக்கவியினை, எப்பதத்தில் நீ வைப்பாய் இந்நாள்?

திருவாசகமணி
இயற்றியுள்ள
ஏனைய நூல்கள்

ஆங்கிலம்

1. திருவாசகம் — மொழிபெயர்ப்பு. அச்சில்
2. தென் இந்தியப் பிரமுகர்கள் பாகம்-1 } பிரதிகள் கிடையா
3. „ „ பாகம்-2 }
4. சைவ சித்தாந்தம்—வானொலிச் சொற்பொழிவுகள் விலை ரூபா ஒன்று

தமிழ்

இயல்

5. திருப்போரூர்ச் சதகம் விலை அணு நான்கு
6. திருப்பழநி வெண்பா அந்தாதி „ „ ஆறு
7. திருநாவுக்கரசர் பதிற்றுப்பத்தந்தாதி „ „ ஆறு
8. மாணிக்கவாசகர் மாலை பிரதிகள் கிடையா
9. திருத்தொண்டர் முதுமொழி வெண்பா அச்சில்
10. வடதிருமுல்லைவாயில் திருப்பதிகம் விலை அணு இரண்டு
11. வடபழநித் திருப்பதிகம் „ „ „
12. கள்ளழகர் திருப்பதிகம் „ „ „
13. ஆதிகுமாரகுருபரர் திருப்பதிகம் „ „ நான்கு
(ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.)

இசை

14. கீதத்தமிழ்-நூறு தமிழ்க் கீர்த்தனைகள். விலை ரூபாய் மூன்று
15. திருத்தொண்டர் கீதம்-சைவ நாயன்மார்களைப் பற்றிய கீர்த்தனைகள்

கிடைக்கும் இடம்: தருமபுர ஆதீனம், மாயவரம் போஸ்டு.

16. சிவாலய கீதம்—ஒவ்வொரு சிவாலயத்துக்கும் ஒரு கீர்த்தனை அச்சில்

கிடைக்கும் இடம் :- திருவாசகமணி
c/o. டி. சிவஞானம்
யுனைடெட் பிரிண்டர்ஸ்
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

திருச்சிறுப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி.